DMC CUM JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 04 /2024 , Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தங்கராசு | Caste | : | - |
| Father/ Husband Name | : | பரமசிவம் | Calling | : | ஓட்டுநர் |
| Village | : | எழுமூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 44 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.02.2026 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 29.04.2023 ம் தேதியன்று என்னுடைய மனைவி தனலட்சுமி என்பவர் சைக்கிளை ஓட்டிக் கொண்டும் பின்புறமாக 12 வயதுள்ள மகள் திவ்யா என்பவரை அமரவைத்துக் கொண்டு எழுமூரிலிருந்து ஆய்க்குடி செல்லும் சாலையில் காலை 10.30 மணிக்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது புறமாக இளவரசன் வயலருகே சென்று கொண்டிருந்தபோது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி டிராக்டர் ஒன்று இரண்டு கரும்பு பெட்டிகளை ஏற்றிக் கொண்டு சாலையில் அதிவேகமாக வந்து சைக்கிளில் சென்ற என் மனைவி மற்றும் மகள் மீது மோதியதில் அவர்கள் கீழே விழுந்து இஞ்சினில் முன்சக்கரம் ஏறியதில் இரண்டு நபர்களுக்கும் வயிறு மற்றும் இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டு நிகழ்வினை மணிவேல், கண்ணன் என்கிற இளவரசன் மற்றும் என் தந்தை பரமசிவம் ஆகியோர் பார்த்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தபோது மருத்துவர்கள் திருச்சி மருத்துவமனைக்கு என் மகளை அழைத்துச் செல்ல சொன்னதின் பேரில் அழைத்துச் சென்ற போது சிறுவாச்சூர் பாலம் அருகே ஆம்புலன்ஸ் செல்லும் போது இறந்துவிட்டார். பின்னர் என் மனைவியினை ABC மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பின்னர் அவர் குணமானார். விபத்துக் குறித்து கேட்டறிந்தபோது டிராக்டர் ஓட்டிய நபர் ஆறுமுகம் என்று கேள்விப்பட்டு போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். **அந்த புகார் அ.சா. ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

போலீசார் என்ன தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மங்களமேடு காவல் நிலையத்தில் 29.04.2023 அன்று வைத்து விசாரித்தார்கள். புகாரிலுள்ள விபரங்களை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். புகாரிலுள்ள விபரங்களை யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். விபத்து நடந்த விபரங்களை யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் என் மனைவியின் மூலமாக தெரிந்து கொண்டேன். விபத்து நடந்து எவ்வளவு நேரம் களித்து மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மதியம் சுமார் 01.00 முதல் 01.30 மணிக்குள் சென்றேன். அதன் பிறகு உங்கள் மனைவியை எத்தனை மணிக்கு பார்த்தீர்கள் என்றால் இரவு 07.30 மணிக்கு பார்த்தேன். அப்போது அவர் பேசும் மனநிலையில் இல்லை. இரண்டு நாள் கழித்து எனக்குத் தகவல் சொன்னார்கள். புகார் மனுவினை காவல் நிலையத்தில் எப்போது கொடுத்தேன் என்றால் மாலை 6 அல்லது 6.30 க்கு கொடுத்தேன். விபத்து சம்பவத்தை நேரில் பார்த்த உமது தந்தை பரமசிவம் காவல் நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால் புகார் அளிக்கவில்லை. நான் தான் புகார் அளித்தேன். விபத்து சம்பவத்தை நேரடியாக உமது தந்தை பார்த்திருந்தால் அவரே புகார் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை வேகமாக செல்லும் சாலையா என்றால் இல்லை. ஆனால் வேகமாக வந்தார். விபத்து நடந்த சாலை குறுகிய சாலை என்பதால் இரண்டு பெட்டிகளை வைத்துக் கொண்டு வேகமாக வரமுடியாது, வழக்கிற்காக வேகமாக வந்தார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கினைப் பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும் எனது மகள் விபத்தில் இறந்துபோய் விட்டார் என்பதாலும் எனது மனைவிக்கு காயம் ஏற்பட்டது விபத்து தீர்ப்பாயத்தில் இழப்பீடு பெற வேண்டி பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMCOURTKUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 04/2024 , Kunnam P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தனலட்சுமி | Caste | : | - |
| Father/ Husband Name | : | தங்கராசு | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Village | : | எழுமூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 38/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.02.2026 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா 1 தங்கராசு எனது கணவர். கடந்த 29.04.2023ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் நான் சைக்கிளை ஓட்டிக் கொண்டும் பின்னால் என்னுடைய 11 வயதுடைய மகள் திவ்யா என்பவரை அமர வைத்துக் கொண்டு வீட்டிலிருந்து வயலுக்கு ஆய்க்குடி பாதையில் இடது புறமாக கண்ணன் காடு அருகே செல்லும் போது டிராக்டர் பின்பக்கமாக வந்தது. அந்த டிராக்டர் எங்கள் சைக்கிளின் பின்பக்கமாக வந்து இடித்தது. அந்த டிராக்டரில் இரண்டு காலி கரும்பேற்றும் பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தது. நாங்கள் வலதுபுறமாக விழுந்தபோது டிராக்டரின் முன் சக்கரம் எங்கள் மீது ஏறியது. அந்த டிராக்டர் ஓட்டிய நபர் யார் என்று எனக்குத் தெரியாது. ஏனெனில் நான் முன்பக்கமாக சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்தபோது, பின்னால் வந்த நபர் யார் என்று எனக்குத் தெரியாது. அந்த விபத்தில் என்னுடைய 11 வயது மகள் திவ்யாவிற்கு வயிற்றில் காயம் ஏற்பட்டு எனக்கு வயிறு மற்றும் முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட்டது. கீழே விழுந்த அதிர்ச்சியில் எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. ஒரு மாதமாக மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்தேன். என் கணவர் என்னுடன் மருத்துவமனையில் உடன் இருந்தார். எனது கணவர் போலீசாரிடம் புகார் கொடுத்தார். சிகிச்சைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே என் மகள் இறந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். இந்த விபத்திற்கு டிராக்டர் ஓட்டிய ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணமாகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

DMC CUM JM COURT, KUNNAM

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஒரு மாதம் கழித்து விசாரித்தார்கள். நாங்கள் சென்ற பாதை பெரியதா சிறியதா என்றால் பேருந்து செல்லும் அளவில் இருந்தது. விபத்தினை ஏற்படுத்திய டிராக்டர் அந்த வழியாக மெதுவாக தான் செல்ல இயலும் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய கவனக்குறைவால் தான் இந்த வழக்கு விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் எனக்குத் தெரியாது. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JM COURT, KUNNAM

DMC CUM JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| C.C.No. 04/2024 , Mangalamedu P.S. PW -3. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பரமசிவம் | Caste | : | - |
| Father/ Husband Name | : | மாணிக்கம் | Calling | : | விவசாயம் |
| Village | : | எழுமூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 73 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.02.2026 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 என்னுடைய மகன். அ.சா. 2 என்னுடைய மருமகள் ஆவார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு எனது மருமகள் அ.சா.2 சைக்கிளை ஓட்டிக்கொண்டும் பின்னால் 13 வயது மதிக்கத்தக்க எனது பேத்தி திவ்யா என்பவரை சைக்கிளின் பின்னால் அழைத்துக் கொண்டு எழுமூரிலிருந்து ஆய்க்குடி சாலையில் எங்களது காட்டிற்கு கிழக்கு நோக்கி வந்துக் கொண்டிருந்தபோது, கண்ணன் காட்டிற்கு அருகே காலை 10.30 மணிக்கு வந்து கொண்டிருந்தபோது, டிராக்டர் ஒன்று இரண்டு பெட்டிகளுடன் வந்து சைக்கிளின் மீது மோதி விபத்து ஏற்பட்டத்தில் எனது பேத்திக்கு வயிற்றுப் பகுதியிலும் எனது மருமகள் அ.சா. 2 க்கு வயிறு மற்றும் இடுப்பில் காயம் ஏற்பட்டது. டிராக்டர் ஓட்டிய நபர் முருக்கன்குடி ஊர் என்று தெரிந்து கொண்டேன். விபத்தில் காயமடைந்த பேத்தியையும் அ.சா 2 ஐயும் அழைத்துச் சென்ற போது திருச்சிக்கு செல்லும் வழியிலேயே இறந்து போய் விட்டார். அ.சா. 2 இரண்டு மாதங்கள் சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை **பகுதி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

போலீசார் விசாரணையில் கடந்த 29.04.2023 ம் தேதியன்று விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். கண்ணன் என்ற இளவரசன் வயலருகே காலை 10.30 மணிக்கு வந்தபோது தான்

விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புதிய பதிவு செய்யாத டிராக்டர் என்றும், அதன் பின்னால் 2 பெட்டி இணைக்கப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். முருக்கன்குடியைச் சேர்ந்த ஆறுமுகம் டிராக்டரை ஓட்டி வந்தார் என்று போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மணிவேல், கண்ணன் என்கிற இளவரசன், ராமசாமி மற்றும் நானும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

விபத்தினை நேரில் எப்பக்கத்தில் பார்த்தேன் என்றால் பின்பக்கமாக பார்த்தேன். விபத்தினை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வண்டி இடித்தப் பிறகு தான் பார்த்தேன். போலீசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். இவ்விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் விபத்தில் இறந்துபோனது உங்கள் பேத்தி என்பதாலும் அடிப்பட்டது உங்கள் மருமகள் என்பதாலும் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று பொய்யாக சாட்சி கூறினேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMJUMCOURT, KUNNAM